RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# செவ்வியல் இலக்கியங்களில் அழுகை மெய்ப்பாட்டு கூறுகள்

**கோ. ஜெகதீஸ்வரி** [அ *]

[அ] தமிழ்த்துறை, கே.ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641035, இந்தியா

# A Study of Azhugai Meyppadu in Classical Tamil Literature

**G. Jagadeeswari** [a, *]

[a] Department of Tamil, KG College of Arts and Science, Coimbatore – 641035, India

*Corresponding Author:
g.jagadeswari@kgcas.com

**ABSTRACT**

Joy and sorrow are inseparable aspects of human life, and the experience of grief is an inevitable part of the human condition. Among the many emotions experienced by human beings, tears emerge as a natural expression of both profound happiness and deep sorrow. Although joy and suffering are often regarded as two sides of the same coin, people instinctively seek happiness while fearing and avoiding sorrow. Throughout every stage of life, human beings encounter moments of grief, revealing the emotional vulnerability that is inherent in human existence.Classical Tamil literature offers profound insights into the emotional dimensions of human life by portraying grief and weeping as essential expressions of lived experience. The concept of Azhugai Meyppadu (The emotional manifestation of weeping), as understood in Tamil literary tradition, illustrates how sorrow is expressed through physical and emotional responses in diverse contexts. These portrayals not only enrich the aesthetic quality of literary works but also reflect the psychological depth and humanistic outlook of ancient Tamil society. This article examines the expressions of Azhugai Meyppadu in classical Tamil literature, demonstrating how the emotion of grief is intricately interwoven with human life and literary expression.

**Keywords:** Meyppadu, human life, emotional vulnerability, Tamil Literature

## முன்னுரை

மனித மனதின் நீங்காத ஆழமான உணர்வு அழுகையாகும். மானுட வாழ்வின் குணாதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் அழுகை என்ற உணர்வானது தவிர்க்க இயலாத இடத்தைப் பெற்றுள்ளது எனலாம். மானுட வாழ்வின் அனைத்துக் காலக்கட்டங்களிலும் அழுகை என்ற உணர்வை சந்திக்கும் திறனற்றவனாகவே மனிதன் திகழ்கிறான். இந்த அழுகை என்ற மெய்ப்பாட்டு நிலை செவ்வியல் இலக்கியங்களில் புலவர்களின் பாடல்களிலும், இலக்கிய மாந்தர்களின் வாழ்விலும் நிறைந்துள்ள விதத்தைப் பற்றி ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகிறது.

## மெய்ப்பாடு

மனித உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை அவனது உடலின் வழி வெளிப்படுத்தும் நிகழ்வையே மெய்ப்பாடு என்று அழைக்கின்றோம். தமிழர்களின் அகப்புற வாழ்வியல் ஒழுக்கங்கள், உணர்ச்சிகள், சமூகம் ஆகியவற்றிற்கு இலக்கணம் கூறும் தமிழின் முதல் நூலான தொல்காப்பியம் இதனை,

“நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்ற

அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப”1

என்று குறிப்பிடுகிறது.

எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றே அழுகை என்ற மெய்ப்பாட்டு நிலையாகும். இதுவே இரங்கலுக்கு இடனாக அமைகிறது எனலாம். இந்த அழுகை எனும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய காரணங்களை எடுத்துரைக்கும் பொழுது,

"இளிவே இழவே அசைவே வறுமையென

விளிவில் கொள்கை அழுகை நான்கே" 2

என்ற பாடல் வழி சுட்டிக் காட்டுகிறார் தொல்காப்பியர்.

## சங்க இலக்கியங்களில் அழுகை

சங்க கால மக்கள் அக உணர்வும், புற உணர்வும் உடையவர்களாகத் திகழ்கின்றனர். நிலையற்ற மானுட வாழ்வில் அழுகை என்ற அவல நிலை இவர்களின் வாழ்க்கை முறையோடு பின்னிப்பிணைந்துள்ளது. சங்க காலப் புலவர்கள் பிறரின் துன்பத்தை தம் துன்பம் போல் நினைத்து, வருந்தி வாழ்ந்த சான்றோர்கள் ஆவர்.

இவர்கள் தாம் உருவாக்கிய தலைவன் தலைவியைத் துன்புறச் செய்து அவர்களின் பிரிவாற்றாமையினாலோ மற்றும் பிற காரணங்களாலோ வாடச் செய்த அவலநிலையை புலவர்களின் பாடல்கள் வழி அறியமுடிகிறது. தமிழரின் வரலாற்றுப் பெட்டகம் என்று அழைக்கப்படும் புறநானூறில் அவலச் சுவை நிறைந்த கையறுநிலைப் பாடல்கள் மிகுதியாகக் காணக்கிடைக்கின்றன. இவற்றில்,

"யாங்குப் பெரிதாயினும் நோயள வெனைத்தே

உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்

கள்ளி போகிய களரியம் பறந்தலை

வெள்ளிடை பொத்திய விளைவிற கீமத்

தொள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி

ஞாங்கர் மாய்ந்தனன் மடந்தை

இன்னும் வாழ்வ லென்னிதன் பண்பே"3

என்னும் பாடலில் சேரமான் கோட்டம் பலத்துஞ்சிய மாக்கோதை தன் மனைவியின் மேல் கொண்டிருந்த காதலை பறை சாற்றுவதாக அமைந்துள்ள பாடல் கையறுநிலை பாடலாயினும் படிப்போர் மனதில் உவகையை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது எனக் கருதலாம்.

சங்க காலம் போர்கள் அதிகம் மிகுந்த காலமாகக் கருதப்படுகிறது. இதில் ஒரு அரசன் மற்றொரு அரசனை அழிப்பதோடு மட்டுமல்லாமல் அவன் சார்ந்த நிலவியலையும் பாழ்படுத்தி ஒரு சமுகத்தையே புலம் பெயரச் செய்தனர். இதனை,

"மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லேர்"4

என்ற பாடல் வரி சங்ககால சமூகத்தில் நிலவிய அவல நிலையினை எடுத்துரைக்கிறது.

## சிலப்பதிகாரத்தில் அழுகை

தமிழரின் பண் பாட்டினையும், கலாச்சாரத்தையும் எடுத்துரைக்கும் தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் வணிகர் குலச் செம்மலான கோவலன் மதுரை மாநகரில் பாண்டிய மன்னனின் தவறான தீர்ப்பினால் கொலை செய்யப்பட்டான் என்ற செய்தியை அறிந்த கண்ணகி அழுது புலம்பிய அவலநிலையை,

"இன்புற்று தங்கணவர் இடர் ஏரி அகம் மூழ்கத்

துன்புறு வளநோற்றுத் துயருறு மகளிரைப் போல

முன்பதை அலர் தூற்ற மன்னவன் தவறிழைப்ப

அன்பினை இழந்தேன்யான் அவலம் கொண்டு அழிவலோ"5

என்ற சிலப்பதிகார பாடல்வரிகள் எடுத்தியம்புகின்றன.

## மணிமேகலையில் அழுகை

தமிழரின் பண்பாட்டு வரலாற்றுக் காப்பியம் என்று அழைக்கப்படும் தமிழின் இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் காயச்சண்டிகையின் கணவன் காஞ்சனனால் வெட்டி வீழ்த்தப்பட்டு இறந்து கிடக்கும் உதயகுமாரனைக் கண்ட மணிமேகலை முற்பிறவியில் தனது கணவனாக இருந்த அவன் இறந்தமைக்காக வருந்திப் புலம்பிய அவல நிலையினை,

"திட்டிவிடம் உனநின் உயிர்போம் நான்

கட்டழல் ஈமத்து என் உயிர் சுட்டேன்

உவவனம் மருங்கில் நின்பால் உள்ளம்

தவிர்வு இலேன் ஆதலின் தலைமகள் தோன்றி" 6

என்ற பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

## சீவக சிந்தாமணியில் அழுகை

செவ்வியல் இலக்கியங்களை அடுத்து ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணியில், ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் இறந்த பிறகு அரச மாளிகையில் பிறக்க வேண்டிய சீவகன் சுடுகாட்டில் பிறந்ததை எண்ணி ஏங்கிய விசயையின் அவல நிலையை,

"வெல்வாய் ஓரிமுழவாக விளிந்தார் ஈமம் விளக்காக

ஒவ்வாச் சுடுகாட்டு உயர் அரங்கின் நிழல்போல் நுடங்கப் பேயோட

எவ்வாய் மருங்கும் இருந்து இரங்கிக் கூகை குழறிப் பாராட்ட

இவ்வாறுகிப் பிறப்பதோ? இதுவோ மன்னர்க்கு இயல் வேந்தே?"7

என்ற பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

## முடிவுரை

சங்ககாலம் முதல் சமகாலம் வரையிலான இலக்கியங்கள் அனைத்தும் அக்காலக்கட்டங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன. தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றான அழுகை என்ற அவல நிலை இலக்கியங்களில் காணப்படும் புலவர்கள் மற்றும் மாந்தர்களின் வாழ்வில் நிறைந்து காணப்பட்டாலும் அவை கற்போர் மனதில் உவகையையே ஏற்படுத்துகின்றன என்பதை இக்கட்டுரை மூலம் உய்த்துணர முடிகிறது.

## References

புலியூர் கேசிகன் (2021) சிலப்பதிகாரம் மூலமும் உரையும், குமரன் பதிப்பகம், சென்னை

துரை. தண்டபாணி (2010) மணிமேகலை தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை

செல்வராசு, அ. (2024) புறநானு உரை வேறுபாடு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

துரை இராசராம் (2008) சீவக சிந்தாமணி விளக்கவுரை, முல்லை நிலையம், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License